ෆැක්ස්
தொலைநகல் } 2323730
Fax

ඊ-මේල්
மின்னஞ்சல் } cabsecsl@sltnet.lk
E-mail

වෙබ් අඩවිය
வெப் தளம் } www.CabinetOffice.gov.lk
Web Site

# අමාත්‍ය මණ්ඩල කාර්යාලය
# அமைச்சரவை அலுவலகம்
# OFFICE OF THE CABINET OF MINISTERS

ජනරජ චතුරශ්‍රය, ශ්‍රීමත් බාරොන් ජයතිලක මාවත, කොළඹ 01.
குடியரசுச் சதுக்கம், சேர் பாரோன் ஜயதிலக்க மாவத்தை, கொழும்பு 01.
Republic Square, Sir Baron Jayathilaka Mawatha, Colombo 01.

මගේ අංකය
எனது இல. } *09/1041/360/034*
My No.

ඔබේ අංකය
உமது இல. }
Your No.

சனாதிபதியின் செயலாளர்
பிரதம அமைச்சரின் செயலாளர்
அமைச்சுச்களின் செயலாளர்கள் அனைவருக்கும்

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு ஆகியவற்றின் கீழ் உள்ள தாபன விடயங்களுக்கான இடைக்கால நடவடிக்கைகள்**

2009.06.17 ஆம் திகதி நடாத்தப்பட்ட அமைச்சரவையின் கூட்டத்தில் அமைச்சரவையானது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவும், தேசிய பொலிஸ் ஆணைக்குழுவும் தகுந்த முறையில் மீளமைப்புச் செய்யப்படும்வரை ஓர் இடைக்கால நடவடிக்கையாக இலங்கை பொலிஸ் சேவையையும் உள்ளடக்கி அரசாங்க சேவையில் உள்ள தாபன விடயங்களைக் கையாளுவதில் பின்வரும் நடைமுறையைப் பின்பற்றுமாறு அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு அறிவுறுத்துரை விடுப்பதற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதற்கமைவாக நடவடிக்கை எடுக்குமாறு தாங்கள் வேண்டப்படுகின்றீர்கள்.

*(அ)* **நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றங்கள்:**

(I) சகல அனைத்திலங்கைச் சேவைகளையும் உள்ளடக்கி பதவி நிலைத்தரங்களில் உள்ள நியமனங்கள் இயைபுள்ள சேவைப் பிரமாணக் குறிப்புகளிலும்/ஆட்சேர்ப்புத் திட்டங்களிலும் வழங்கப்பட்டுள்ள நடைமுறைகளையும் 36 ஆம் 36 (I) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைகளிலும் விதித்துரைக்கப்பட்ட வழிகாட்டல்களையும் பின்பற்றி அச்சேவைகளின் இயைபுள்ள அமைச்சுக்களின் செயலாளர்களினால்/நிருவாக அதிகாரிகளினால் செய்யப்படல் வேண்டும்.

(II) அரசாங்க சேவையிலுள்ள பதவிநிலைத்தரப் பதவிகளின் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான அவசர தேவைப்பாடுகள் ஏற்கனவேயுள்ள சேவைப் பிரமாணக் குறிப்புகளை/ஆட்சேர்ப்பு திட்டங்களை பின்பற்றி 06/2006 ஆம் இலக்கமுடைய அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் நியதிகளின் பிரகாரம் தேசிய சம்பளங்கள், பதவியணிகள் ஆணைக்குழுவின் மூலம் கண்டறியப்பட்ட சம்பள அளவுத் திட்டங்களைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் செய்யப்படுதல் வேண்டும். இதற்கிடையில் தாபனப் பணிப்பாளர் நாயகத்தினதும், தேசிய சம்பளங்கள், பதவியணிகள் ஆணைக்குழுவினதும் ஒருப்பாட்டுடன் 06/2006 ஆம் இலக்கமுடைய அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் குறித்த சேவைப் பிரமாணக் குறிப்புகளை/ஆட்சேர்ப்பு திட்டங்களை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

ලේකම්
செயலாளர் } 2329620
Secretary

අතිරේක ලේකම්
மேலதிகச் செயலாளர் } 2325279
Additional Secretary

ප්‍රධාන ලිපිකරු
பிரதம இலிகிதர் } 2422438
Chief Clerk

(III) அமைச்சுக்களின் மேலதிகச் செயலாளர்கள், சிரேட்ட உதவிச் செயலாளர்களின் நியமனங்கள் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் செய்யப்படல் வேண்டும்.

(IV) அனைத்திலங்கைச் சேவைகள் தவிர்ந்த அரசாங்க சேவையிலுள்ள பதவிநிலைத் தரங்களுக்கான பதவியுயர்வுகள் தாபனப் பணிப்பாளர் நாயகம் மற்றும் தேசிய சம்பளங்கள், பதவியணிகள் ஆணைக்குழுவின் ஒருப்பாட்டின் மீது 06/2006 ஆம் இலக்கமுடைய அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் குறித்த சேவைப் பிரமாணக் குறிப்புகள் / ஆட்சேர்ப்புத் திட்டடங்கள் திருத்தியமைக்கப்பட்டதன் பின்னர் பதவிக்குரிய சேவைப் பிரமாணக் குறிப்பில் / ஆட்சேர்ப்புத் திட்டத்தில் விதித்துரைக்கப்பட்டுள்ள நடமுறையைப் பின்பற்றி இயைபுள்ள நியமன அதிகாரிகளினால் செய்யப்படல் வேண்டும். அனைத்திலங்கைச் சேவைகளுக்கான பதவியுயர்வுகளை வழங்கும் போது அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

(V) பொலிஸ் சேவைக்கான ஆட்சேர்ப்பு திறைசேரியினதும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சுச் செயலாளரினதும் முன் அங்கீகாரத்துடன் பொலிஸ்மா அதிபரினால் செய்யப்படல் வேண்டும். ஆயினும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் விடயத்தில் அத்தகைய நியமனங்களைச் செய்வதற்கு முன்னர் இயைபுள்ள சகல விபரங்களையும் வழங்கி அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

(VI) உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தரத்துக்கும் அதற்கு மேற்பட்ட தரங்களுக்குமான பதவியுயர்வுகளை வழங்குவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

(VII) அரசாங்க சேவைகளுக்கான இடமாற்றங்கள் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளினால் திருத்தப்பட்டவாறான தாபன விதிக் கோவையில் விதித்துரைக்கப்பட்டுள்ள நடைமுறையைப் பின்பற்றி இயைபுள்ள அமைச்சுச் செயலாளரினால்/நிருவாக அதிகாரியினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(ஆ) **ஒழுக்காற்று நடவடிக்கை :**

(I) அரசாங்க சேவையிலுள்ள பதவிநிலைத்தர உத்தியோகத்தர்களுக்கு எதிராகச் செய்யப்படுகின்ற ஒழுக்காற்று நடவடிக்கை தாபன விதிக்கோவையிலும் இயைபுள்ள அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளிலும் விதித்துரைக்கப்பட்டுள்ள தன்படி அமைச்சுக்களின் செயலாளர்களினால் /நிருவாக அதிகாரிகளினால் செய்யப்படல் வேண்டும். எனினும், முறைமையான ஒழுக்காற்று விசாரணையொன்றின் பின்னர் குற்றம் நிரூபிக்கப்படும் சந்தர்ப்பங்களில் தண்டனை விதித்தல் அல்லது குற்றவாளியாகக் காணப்படாத சந்தர்ப்பத்தில் குற்றங்களிலிருந்து விடுவித்தல் சம்பந்தமான அங்கீகாரத்தைப் பெறுவதற்கு அவ்விடயமானது அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(II) பதவிநிலைத் தர உத்தியோகத்தர்கள் சம்பந்தப்பட்ட ஒழுக்காற்றுக் கட்டளைகளுக்கு எதிராகச் செய்யப்படுகின்ற சகல மேன்முறையீடுகளும் ஏற்புடையதாகின்றவாறு இயைபுள்ள அமைச்சின் செயலாளரின் /நிருவாக அதிகாரியின் அறிக்கையுடன் சேர்த்து அமைச்சரவைக்கு அனுப்பப்படல் வேண்டும்.

(இ) **சேவை நீடிப்பு, இளைப்பாறுகை, மீள்பணிக்கமர்த்துகை :**

(I) 57 ஆம் வயதிற்கு அப்பாலுமான சேவை நீடிப்பு அங்கீகரிக்கப்பட்ட நடைமுறையைப் பின்பற்றி சம்பந்தப்பட்ட அமைச்சரின் உசாவுதலுடன் குறித்த அமைச்சின் செயலாளரினால் / நிருவாக அதிகாரிகளினால் நடைமுறைப் படுத்தப்படல் வேண்டும். பதவிநிலைத்தர உத்தியோகத்தர்களுக்கு 57 வயது கடந்ததன் பின்னர் சேவை நீடிப்பு வழங்காமை சம்பந்தப்பட்ட மேன்முறையீடுகள் பரிசீலனை செய்யப்படுவதன் பொருட்டு அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(II) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் இதுவரை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்களின் சாதாரண இளைப்பாறுகை, விடயத்திற்கேற்ப இயைபுள்ள அமைச்சுக்களின் செயலாளர்களினால் / நிருவாக அதிகாரிகளினால் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். ஒழுக்காற்று நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள விடத்து அத்தகைய இளைப்பாறுகை ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 12 ஆம் பிரிவின் கீழ் இயைபுள்ள அமைச்சுகளின் செயலாளர்களினால் / நிருவாக அதிகாரிகளினால் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

(III) 24/2007 ஆம் 24/2007(I) ஆம் இலக்கங்களைக் கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளின் நியதிகளின் பிரகாரம் பயன்படுத்தப்படாத லீவுகள் தொடர்பில் மீளப் பணிக்கமர்த்தும் பொருட்டு சகல உத்தியோகத்தர்களினாலும் செய்யப்படுகின்ற உரிமைக் கோரிக்கைகள் தொடர்பில் குறித்த அமைச்சின் செயலாளரினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

(IV) இளைப்பாறிய பதவிநிலைத்தர உத்தியோகத்தர் ஒருவரை அல்லது பதவிநிலைத்தரம் சாராத உத்தியோகத்தர் ஒருவரை வெற்றிடமாக நிலவும் பதவியொன்றில் மீளப் பணிக்கமர்த்தும் பொருட்டு கோரிக்கை முன்வைக்கபடுதல் இந்தப் பதவிக்கு நிரந்தர அடிப்படையில் அல்லது பதில் கடமையாற்றும் அடிப்படையில் அல்லது கடமைகளை நிறைவேற்றும் அடிப்படையில் நியமிப்பதற்கு பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவரைக் கண்டறிவதற்கு இயலாதவிடத்தில் மட்டுமே செய்யப்படல் வேண்டுமென்பதுடன், இத்தகைய கோரிக்கைகள் பரிசீலனை செய்யப்படுவதன் பொருட்டு அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். (வெற்றிடமாகவுள்ள பதவியொன்றுக்கு இளைப்பாறிய உத்தியோகத்தர் ஒருவரை மீளப் பணிக்கமர்த்தும் பொருட்டு செய்யப்படுகின்ற அத்தகைய எந்தவொரு கோரிக்கையும் இந்தப் பதவிக்கு நிரந்தர அடிப்படையில் நியமிப்பதற்கு உத்தியோகத்தர் ஒருவர் இல்லையென இயைபுள்ள நியமனம் செய்யும் அதிகாரியின்/ நிருவாக அதிகாரியின் சான்றிதழுடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.)

(ஈ) **அரசாங்க உத்தியோகத்தர்களின் பதவி விலகலும், சேவையிலிருந்து விடுவிப்பும்:**

(I) சாதாரண நிலைமையின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களின் பதவி விலகல்கள் இயைபுள்ள அமைச்சுக்களின் செயலாளர்களினால் ஏற்றுக் கொள்ளப்படும். ஆயினும், ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் பதவி விலகல்கள் தொடர்பில் தீர்மானமொன்றினை எடுப்பதற்கு அவை அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(II) பதவிநிலைத்தர உத்தியோகத்தர்களை வேறு நிறுவனங்கள், கருத்திட்டங்கள் முதலியனவற்றிற்கு விடுவித்தலானது தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகள் மற்றும் சுற்றுநிருப அறிவுறுத்துரைகளைப் பின்பற்றி இயைபுள்ள அமைச்சுக்களின் செயலாளர்களினால் செய்யப்படல் வேண்டும். ஏற்கனவேயுள்ள வழிகாட்டல்களிலிருந்து செய்யப்படும் எந்த விலகல்களும் பரிசீலனை செய்யப்படுவதற்காக அமைச்சரவைக்குத் அனுப்பப்படல் வேண்டும்.

(உ) **வெளிநாட்டு லீவு:**

(I) ஒழுக்காற்று நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் வெளிநாடுகளுக்குச் செல்வதற்கான லீவுகளுக்கான கோரிக்கைகள் பரிசீலனை செய்யப்படுவதற்காக அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(ஊ) **கையளிக்கப்பட்ட அதிகாரங்கள்:**

(I) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அமைச்சுகளின் செயலாளர்களுக்கும் திணைக்களத் தலைவர்களுக்கும் ஏற்கனவே கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மேலும் அவ்வாறே தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும்.

(எ) இந்த அறிவுறுத்துரைகளில் குறிப்பிடப்படாத பிற எந்த விடயங்களும் பரிசீலனை செய்யப்படுவதன் பொருட்டு அமைச்சரவைக்கு அனுப்பப்படல் வேண்டும்.

**ட.விஜேசிங்க,**
**அமைச்சரவைச் செயலாளர்.**

2009 யூன் மாதம் 25 ஆம் திகதி.